செ.வெ. எண்: 130 நாள் : 10.02.2011.

**விலைவாசி நிலவரம்**

**மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் ஆய்வு**

மாநில அளவிலான விலை கண்காணிப்புக் குழு கூட்டம் இன்று (10.02.2011) மாலை 4.00 மணியளவில் புதிய தலைமைச் செயலகத்தில் நடைபெற்றறது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் விலைக் கண்காணிப்புக் குழுவின் உறுப்பினர்களான தலைமைச் செயலாளர் திருமதி எஸ். மாலதி, இ.ஆ.ப., கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் முதன்மை செயலாளர் திரு. ஸ்வரன்சிங், இ.ஆ.ப., நிதித் துறை முதன்மைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., வேளாண்மைத் துறை ஆணையாளர் திரு. அதுல் ஆனந்த், இ.ஆ.ப., வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநர் திரு. து. விவேகானந்தன், இ.ஆ.ப., உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் ஆணையாளர் திரு. கா. பாலச்சந்திரன், இ.ஆ.ப., கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் திரு. யதீந்த்ரநாத் சுவெய்ன், இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் திரு. வீர சண்முக மணி, இ.ஆ.ப., இந்திய உணவுக் கழகத்தின் பொது மேலாளர் திரு. எச்.ஆர். ராத்தோட், தமிழ்நாடு முற்போக்கு நுகர்வோர் சங்க உறுப்பினர் திரு. ரமணி மற்றும் கன்னியாகுமரி நுகர்வோர் பாதுகாப்பு மையத்தின் தலைவர் திரு. தாமஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வை கட்டுப்படுத்த மத்திய அரசுக்கு ஏற்கனவே அனுப்பப்பட்ட கோரிக்கைகளான விலைவாசி நிலைபடுத்தும் நிதியம் (Price Stabilisation Fund) அமைத்தல், மத்திய அரசு மானிய விலையில் பருப்பு வகைகள் மற்றும் சமையல் எண்ணெய் வகைகளை வழங்கும் திட்டத்தினை 31.12.2012 வரை நீடித்தல் நியாயவிலைக் கடைகள் மற்றும் கிடங்குகள் கட்டுவதற்காக 50 சதவீத மானியத்தில் நிதி ஒதுக்கீடு செய்தல், அரிசி, சர்க்கரை, தனியா, புளி, பூண்டு மற்றும் மிளகாய் ஆகியவற்றை முன்பேர வர்த்தகத்திலிருந்து விலக்களித்தல், அத்தியாவசியப் பொருட்களின் இருப்பு வரம்பினை நிர்ணயித்தல், உழவர் சந்தைகளை அமைக்க நிதியுதவி அளித்தல் போன்ற கோரிக்கைகளை உடனடியாக செயல்படுத்த மத்திய அரசை கோருவது என குழு முடிவு செய்தது.

விளை நிலங்களை வேறு பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்த தரிசாக இருக்க வேண்டிய காலவரையறையை தற்போது உள்ள 3 ஆண்டுகள் என்பதை 10 ஆண்டுகள் என்று திருத்தம் செய்ய பரிந்துரை செய்வது என குழு முடிவு செய்துள்ளது.

ஒவ்வொரு வட்டந்தோறும் கூட்டுறவுத் துறை மூலம் அத்தியாவசியப் பொருட்களை இருப்பு வைத்து விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளலாம் எனவும் குழு முடிவு செய்துள்ளது.

காய்கறிகளின் உற்பத்தியை பெருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்துள்ளது.

காய்கறிகளை சேமிக்க குளிர் சாதன கிடங்குகளை அமைத்துத் தர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்துள்ளது.

வெளியீடு: –

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், செ–9.